தினமலர்
உண்மையின் உரைகல்

அக்டோபர் 21,2013 IST

உலக தமிழர் செய்திகள்

# சிங்கப்பூரில் இறகுப்பந்து விளையாட்டுப் போட்டி




சிங்கப்பூர்: திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் மாணவர்கள் சங்கம், சிங்கப்பூர் கிளை சார்பில், இறகுப்பந்து விளையாட்டுப் போட்டி, சிங்கப்பூர் பூப்பந்தாட்டம் விளையாட்டுக் கூடத்தில் நடத்தப்பட்டது.

சிங்கப்பூருக்கு பெருமை சேர்க்கும் வகையில் சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் நோக்கிலும், ஆரோக்கியமான வாழ்விற்கு வழிகாட்டும் வகையிலும் நடத்தப்பட்ட இறகுப்பந்து போட்டியில் இருபது போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். விளையாட்டுப் போட்டியின் நடுவர்களாக ஹென்றி டியோ, அகஸ்டின், ரோஸ்தம் பங்காற்றினர். இறுதிப்போட்டியில் வெற்றி பெற்ற அப்துல் காதர், சஹாபுதீன் குழுவினருக்கு, சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கஜுரா நிறுவன நிர்வாக இயக்குநர் முஹம்மது நஜ்ரன், பரிசு கோப்பைகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார்.